Puducherry

Regional Bulletin

வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 27.02.2025 - வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

*தலைப்புச் செய்திகள்*

பிரயாக்ராஜ் மகா கும்பமேளா, ஒற்றுமையின் மாபெரும் வேள்வியாகவே நடந்து முடிந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

உலக அளவிலான பொருள் விநியோகச் சங்கிலியில், சவால்கள் அதிகரித்து வரும் நிலையிலும், இந்தியா வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணித்து வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் மேன்மைக்கு பாடுபட்டால் மட்டுமே, முன்னேறிய இந்தியாவை உருவாக்க முடியும் என்று, மத்திய கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்த மஜும்தார் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், சுகாதாரத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் சுகாதாரத் திருவிழாவை, துணைநிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் நாளை தொடக்கி வைக்க உள்ளனர்.

மோடி கும்பமேளா (14)

பிரயாக்ராஜ் மகா கும்பமேளா, ஒற்றுமையின் மாபெரும் வேள்வியாகவே நடந்து முடிந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். பாரம்பரியத்தில் மிகுந்த பெருமிதம் கொண்டுள்ள இந்தியா, புதிய

ஆற்றலுடன் இவ்வாறு முன்னேறி வருவது மகிழ்ச்சிக்கு உரியது என்று, மஹா கும்பமேளா பற்றிய வலைப்பூவிலும், சமூக ஊடகப் பகிர்விலும், பிரதமர் கூறியுள்ளார். இது, புரட்சிகரமான மாற்றங்கள் வாயிலாகப் புதிய வரலாறு படைக்கும் யுகத்திற்கான விடியற் காலம் என்றும் அவர் கூறியுள்ளார். மஹா கும்பமேளாவில், பல கோடி பக்தர்கள் பங்கேற்றது, இந்திய கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தை இன்னும் பல நூற்றாண்டுகளுக்கு வலுவாகவும், வளமாகவும் வைத்து இருப்பதற்கான அஸ்திவாரமே தவிர, வெறும் எண்ணிக்கை சாதனை அல்ல என்று, அவர் தெரிவித்துள்ளார். கடும் உழைப்பு, முயற்சிகள் மற்றும் மன உறுதிப்பாடு மூலம், மஹா கும்பமேளாவை வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ள மக்களுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் மேலும் கூறியுள்ளார்.

உலக அளவிலான பொருள் விநியோகச் சங்கிலியில், சவால்கள் அதிகரித்து வரும் நிலையிலும், இந்தியா வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணித்து வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், ஊடக மாநாடு ஒன்றில் உரையாற்றிய அவர், இனி வரவிருக்கும் காலங்களில், வளர்ந்த நாடுகளுக்குப் பதிலாக, வர்த்தக – தொழில்நுட்ப அம்சங்களே, உலக அமைதியை தீர்மானிக்கும் என்றும், இதில் இந்தியாவின் பங்கு முக்கியமானதாக இருக்கும் என்றும் கூறினார். வளர்ந்த நாடுகளுக்குத் தேவையான தொழில்நுட்பங்கள் மற்றும் திறன்களை வழங்கும் நாடாக இந்தியா திகழும் என்று, நிதியமைச்சர் தெரிவித்தார். அதே சமயம், யுக்தி பூர்வமான இந்தியாவின் தேவைகளுக்கும், ஏழைகள், நடுத்தரப் பிரிவினர் மற்றும் தொழில் முனைவோரின் எண்ணங்களுக்கும், முக்கியத்துவம் அளித்தல் அவசியம் என்று அவர் மேலும் கூறினார்.

வேவ்ஸ் – ஜாஜு (13)

இந்தியாவில் ராமாயண காலத்தில் இருந்தே நிலவும், வளமான கதை சொல்லல் மரபை நவீனமாக்கி, உலக ஊடகங்களுக்குத் தேவையான உள்ளடக்கத்தை, இந்திய படைப்பாளிகள் மூலம் உருவாக்குவதே, பிரதமர்

திரு. நரேந்திர மோடியின் தொலைநோக்குப் பார்வை என்று, மத்திய தகவல் – ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு. சஞ்சய் ஜாஜு கூறியுள்ளார். இதன் முக்கிய பகுதியாகவே மும்பையில் உலக அளவிலான வேவ்ஸ் உச்சி மாநாட்டிற்கு ஏற்பாடுகள் செய்யப் படுவதாக, அவர் இன்று, பெங்களூருவில் ஊடக நிகழ்ச்சி ஒன்றில் பேசுகையில் கூறினார். படைப்புத் திறன்சார் தொழில் நுட்பங்களுக்கான இந்திய கழகம், மும்பையில், வரும் ஏப்ரல் 1 முதல் செயல்படத் தொடங்கும் என, திரு. சஞ்சய் ஜாஜு தெரிவித்தார். உலக அளவிலான ஊடக மற்றும் கேளிக்கைத் துறையில், தற்போது வெறும் 2 சதவிகிதமாக மட்டுமே உள்ள, இந்தியாவின் பங்களிப்பை பல மடங்கு உயர்த்த, இத்தகைய முன்முயற்சிகளால் ஏதுவாகும் என்று அவர் மேலும் கூறினார்.

வேவ்ஸ் போட்டி - 1(7)

மும்பையில், வரும் மே 1 முதல், 4ஆம் தேதி வரை நடைபெற உள்ள, ஊடக மற்றும் கேளிக்கைத் துறைக்கான வேவ்ஸ் உலக மாநாட்டை ஒட்டி, ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Create in India சவால் போட்டிகளின் ஒரு பகுதியாக, மத்திய அரசின் தகவல் – ஒலிபரப்புத் துறை அமைச்சகமும், இந்திய இண்டர்நெட் மற்றும் மொபைல் சங்கமும் இணைந்து, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான வேவ்ஸ் காமிக்ஸ் கதைகள் போட்டி ஒன்றை நடத்துகின்றன. இது குறித்து கூடுதல் விவரங்கள்…

(வாய்ஸ்)

வேவ்ஸ் போட்டி – 2 (17)

வேவ்ஸ் காமிக்ஸ் கதைகள் போட்டியில், உலகெங்கிலும் இருந்து மாணவர்களும் மற்றும் இதர தனி நபர்கள், குழுக்கள் மற்றும் நிறுவனங்களும் பங்கேற்கலாம். போட்டிக்கான காமிக்ஸ் படங்களை Dashtoon Studio மென்பொருள் மூலம் தயாரித்து, Dashtoon மொபைல் செயலி மூலம் காட்சிப் படுத்த வேண்டும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

வேவ்ஸ் காமிக்ஸ் கதைகள் போட்டியில் பங்கேற்க விரும்புவோர், வரும் மார்ச் 15ஆம் தேதிக்குள் wavesindia.org இணையதளத்தில் பெயர்ப் பதிவு செய்து கொண்டு, போட்டிக்கான காமிக்ஸ் படங்களை சமர்பிக்க வேண்டும். முதல் கட்டமாகத் தேர்ந்தெடுக்கப் படும் 50 படங்களின் பட்டியல், மார்ச் 20ஆம் தேதி வெளியிடப்படும். இறுதி வெற்றியாளர்களின் பெயர்கள், வேவ்ஸ் உச்சி மாநாட்டில் அறிவிக்கப் படும். முதல் 3 வெற்றியாளர்களுக்கு, பொதுப் பிரிவில், முறையே 1 லட்சம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய், மற்றும் 25 ஆயிரம் ரூபாயும், மாணவர் பிரிவில் முறையே, 75 ஆயிரம் ரூபாய், 30 ஆயிரம் ரூபாய், மற்றும் 20 ஆயிரம் ரூபாயும் பரிசாக வழங்கப்படும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

சென்னை விமான நிலையம் (12)

சென்னை விமான நிலையத்தில், பயணிகளுக்குத் தேவையான காபி, தேநீர், குடிநீர், மற்றும் தின்பண்டங்களை, 10 ரூபாய் – 20 ரூபாய் விலையில் விற்பதற்கான, உடான் யாத்ரி உணவகத்தை, மத்திய சிவில் விமானப் போக்குவரத்து இணையமைச்சர் திரு. கிஞ்சராப்பு ராம்மோகன் நாயுடு, இன்று திறந்து வைத்தார். பின்னர் அவர், செய்தியாளர்களிடம் பேசுகையில், நாட்டின் இதர விமான நிலையங்களுக்கும் இந்த வசதி நீட்டிக்கப் படும் என்றார்.

சென்னை விமான நிலையத்தில் மேலும் ஒரு போக்குவரத்து முனையம், வரும் மார்ச் 26ஆம் தேதி திறந்து வைக்கப்படும் என்றும், இது அல்லாது இன்னும் ஒரு முனையம் கட்டப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். கேள்வி ஒன்றுக்கு அவர் பதிலளிக்கையில், புதிய விமான நிலையம் அமைக்க பரந்தூரை தேர்வு செய்தது, தமிழக அரசுதான் என்றும், இடத் தேர்வில் மத்திய அரசுக்கு தொடர்பு இல்லை என்றும் கூறினார்.

காரைக்கால் – அமைச்சர் -1 (18)

மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கல்வியாளர்கள் மேன்மையான நிலையை எட்ட, அயராது பாடுபட்டால் மட்டுமே, முன்னேறிய இந்தியா என்னும் கனவை, நனவாக்க முடியும் என்று, மத்திய கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்த மஜும்தார் கூறியுள்ளார். இன்று காரைக்காலில், புதுச்சேரி NIT – உயர்கல்வி நிறுவனத்தின் 15ஆம் ஆண்டு நிறுவன நாள் விழாவை தொடக்கி வைத்துப் பேசிய அவர், மாணவர்கள், பாடப் புத்தகங்களுக்கு அப்பால் கற்கவும், தொழில்நுட்பத்தின் அபார ஆற்றல்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளவும், முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியின் போது, NIT – உயர்கல்வி நிறுவனத்தின் கியானித் – 25 என்னும் தொழில்நுட்பத் திருவிழாவையும், மத்திய அமைச்சர் தொடக்கி வைத்தார். செயற்கை நுண்ணறிவு மற்றும் ஸ்மார்ட் தொழில்நுட்பங்கள் வேகமாக வளர்ந்து வரும் நிலையில், மனிதர்களுக்கும் – இயந்திரங்களுக்கும் இடையிலான ஒத்துழைப்பு என்ற கருப்பொருள் அடிப்படையில், இவ்விழா நடத்தப்படுவது மிகவும் பொருத்தமானது என்று அவர் கூறினார்.

வரவிருக்கும் நிதியாண்டிற்கான மத்திய பட்ஜெட்டில், NIT – உயர்கல்வி நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள், சுமார் 5 ஆயிரத்து 687 கோடி ரூபாயாக 12.85 சதவிகிதம் உயர்த்தப் பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் தெரிவித்தார். காரைக்கால் NIT – உயர்கல்வி நிறுவனம், NIRF

காரைக்கால் – அமைச்சர் -2 (11)

தரவரிசைப் பட்டியலில், தொடர்ந்து முன்னேறி வருவதையும், ஆராய்ச்சித் துறையில் இந்நிறுவனத்தின் பங்களிப்புகள் அதிகரித்து வருவதையும் அவர் பாராட்டினார்.

காரைக்கால் NIT – உயர்கல்வி நிறுவனத்தில், கடலோர மற்றும் ஆற்றங்கரையோர ஆய்வுகளுக்கான ஆராய்ச்சி மையத்தையும், ஊழியர் குடியிருப்பு உள்ளிட்ட வசதிகளையும், மத்திய அமைச்சர் திறந்து வைத்து, சிறந்த ஆராய்ச்சியாளர்களுக்கான அங்கீகார விருதுகளையும் வழங்கிச் சிறப்பித்தார். Brain Bios இணைய தளத்தையும் அவர் தொடக்கி வைத்தார்.

விழாவில், மாநில குடிமைப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு. P.R.N. திருமுருகன், DRDO விஞ்ஞானி டாக்டர் டில்லி பாபு, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு. சோம சேகர் அப்பா ராவ், NIT இயக்குநர் டாக்டர் மகரந்த் மாதவ் கங்ரேக்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சுகாதாரத் திருவிழா (9)

புதுச்சேரியில், உலக சுகாதார தினத்தை முன்னிட்டு, சுகாதாரத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் சுகாதாரத் திருவிழாவை, துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், முதலமைச்சர் திரு. ரங்கசாமி ஆகியோர் இணைந்து நாளை தொடக்கி வைக்க உள்ளனர். கருவடிக் குப்பத்தில் உள்ள, காமராஜர் மணிமண்டபத்தில், மதியம் 3 மணி முதல், இரவு 8 மணி வரை நடைபெற உள்ள, இந்த சுகாதார விழாவில், பொது சுகாதார சேவைகள், புற்றுநோய் கண்டுபிடிப்பு வரையிலான பல்வேறு மருத்துவ பரிசோதனைகளும், ஆலோசனைகளும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் என சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் ரவிச்சந்திரன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்…

(வாய்ஸ்)

புதுச்சேரி – தொழிலாளர் (8)

புதுச்சேரியில், தொழிலாளர்களுக்கும் – தொழிற்சாலை நிர்வாகங்களுக்கும் இடையே நல்லுறவை மேம்படுத்துவது குறித்து, சமரச தீர்வுகளுக்கான தொழிலாளர் துறை அதிகாரி அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, ஒருநாள் பயிற்சி முகாமை, நாளை, முதலமைச்சர் திரு. ரங்கசாமி தொடக்கி

வைக்கிறார். இந்திரா காந்தி மருத்துவ கல்லூரி பயிலரங்கில் நடைபெற உள்ள இப்பயிற்சி முகாமின் தொடக்க விழாவில், சட்டமன்ற உறுப்பினர் திரு. K.S.P. ரமேஷ், தொழிலாளர் துறைச் செயலர் திரு. ஜெயந்த குமார் ரே உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

ஜெயக்குமார் (8)

புதுச்சேரி பிரெஞ்ச் ஆய்வுக் கழகம் சார்பில், மண் பரிசோதனை குறித்து, திருக்காஞ்சியில் இன்று நடைபெற்ற, விவசாயிகளுக்கான விளக்கக் கூட்டத்தை, வேளாண் அமைச்சர் திரு. ஜெயக்குமார் தொடக்கி வைத்தார். மண் பரிசோதனை முடிவுகளின் படி, திருக்காஞ்சி உள்ளிட்ட பகுதிகளில் பயிரிடத் தகுந்த பயிர் ரகங்கள் குறித்தும், தேவையான உரங்கள் மற்றும் பூச்சி மருந்துகள் குறித்தும், புதுச்சேரி மற்றும் தமிழக விவசாயிகளுக்கு, நிபுணர்கள் இக்கூட்டத்தில் விளக்கம் அளித்தனர். தமிழகம் மற்றும் புதுச்சேரிக்கான பிரெஞ்ச் தூதர் திரு. எட்டியேன் ரோலண்ட் பீக் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

கிரிக்கெட் (6)

ICC சாம்பியன்ஸ் கோப்பைக்கான கிரிக்கெட் போட்டித் தொடரில், பாகிஸ்தான் – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையே, ராவல்பிண்டியில் இன்று நடைபெறுவதாக இருந்த, A-பிரிவு போட்டி, மழை காரணமாக, ஒரு பந்துகூட வீசாமல், கைவிடப்பட்டது. போட்டி கைவிடப் பட்டதால், இரு அணிகளுக்கும் தலா 1 புள்ளி வழங்கப் பட்ட போதிலும், புள்ளிப் பட்டியலில், பங்களாதேஷ் – 3ஆம் இடமும், பாகிஸ்தான் – 4ஆம் இடமும் பெற்று, தொடரில் இருந்து வெளியேறின.

பியூஷ் கோயல் (13)

மத்திய தொழில் – வர்த்தக அமைச்சர் திரு. பியூஷ் கோயல் இன்று மும்பையில், இந்தியா அழைக்கிறது மாநாட்டை தொடக்கி வைத்தார். மேக் இண்டியா, டிஜிட்டல் இண்டியா , ஸ்டார்ட் அப் இண்டியா, சுயசார்பு இந்தியா போன்ற மத்திய அரசின் திட்டங்களால், நாட்டில் உள்கட்டமைப்பு வசதிகளும், புதுமையாக்கம் போன்ற புரட்சிகரமான மாற்றங்களும் அதிகரித்து வருவதாக அவர் கூறினார். இந்தியாவில் பெரிய அளவிலான வாய்ப்புகள் உருவாகி வருவதாகவும், இந்தியப் பொருட்களின் சர்வதேச தரம் குறித்த கவலைகள் தற்போது மாறி வருவதாகவும் அவர் தெரிவித்தார். உலக நாடுகளின் சிறந்த உற்பத்தி நடைமுறைகளை இந்தியாவில் பின்பற்றுதல் அவசியம் என்றும், தொழில் – வணிகத் துறையில், நீடித்த நடைமுறைகளுக்கு முக்கியத்துவம் அதிகரிக்க வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார். ஒவ்வொரு துறையிலும், செயல் திறன் மற்றும் போட்டித் திறனை மேம்படுத்துவதில், அரசை மட்டுமே நம்பி உள்ள நிலை மாற வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரயாக்ராஜ் மகா கும்பமேளா, ஒற்றுமையின் மாபெரும் வேள்வியாகவே நடந்து முடிந்து இருப்பதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

உலக அளவிலான பொருள் விநியோகச் சங்கிலியில், சவால்கள் அதிகரித்து வரும் நிலையிலும், இந்தியா வளர்ச்சிப் பாதையில் தொடர்ந்து பயணித்து வருவதாக, மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் மேன்மைக்கு பாடுபட்டால் மட்டுமே, முன்னேறிய இந்தியாவை உருவாக்க முடியும் என்று, மத்திய கல்வித் துறை இணையமைச்சர் டாக்டர் சுகந்த மஜும்தார் கூறியுள்ளார்.

புதுச்சேரியில், சுகாதாரத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, 3 நாள் சுகாதாரத் திருவிழாவை, துணைநிலை ஆளுநர், முதலமைச்சர் ஆகியோர் நாளை தொடக்கி வைக்க உள்ளனர்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. RSS / SM / RK